செ.வெ.எண்: 541 நாள்: 24.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**ஏற்றுமதி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் ஏற்றுமதி வழிகாட்டுதல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.09.2021) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, மத்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் சார்பில் வர்த்தகம் மற்றும் வணிக வாரம் கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக வெளிநாட்டு வர்த்தக இணை இயக்குநர் அலுவலகம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட தொழில் மையம் இணைந்து நடத்திய ஏற்றுமதி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்றையதினம் நடைபெற்றது.

இந்த ஏற்றுமதி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் ஏற்றுமதி தொடர்பான ஆலோசனைகள், ஏற்றுமதி வாய்ப்புகள், சந்தைப்படுத்துதல் குறித்த திட்ட விளக்கங்கள் வழங்கப்பட்டது. மேலும் ஏற்றுமதி தொடர்பான அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்படும் நிறுவனங்களின் கண்காட்சியும் நடத்தப்பட்டது. இதில் 8 ஏற்றுமதி நிறுவனங்களின் உற்பத்தி பொருட்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் ஏற்றுமதி தொழில் செய்ய ஆர்வம் உள்ள தொழில்முனைவோர்கள் பலர் கலந்துகொண்டனர். இதனை தொழில் முனைவோர் உரிய முறையில் கற்றறிந்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரிபுரசுந்தரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரமேஷ், நபார்டு வங்கி மேலாளர் ஜெயஸ்ரீ, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவங்களின் சங்கத் தலைவர் ராஜ்குமார், தொழில் முனைவோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**